செய்தி வெளியீடு எண்: 536 நாள் : 26.10.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணிஅவர்கள் ஆய்வு.

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கில், இன்று (26.10.2015) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் வழங்கல் பணிகள், சாலைப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், புதிய தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால்** அறிவிக்கப்பட்ட சிறப்புச் சாலைகள் திட்டத்தின் செயலாக்கம் குறித்தும், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் சேலம் மாநகராட்சிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சிறப்பு நிதியுதவி பெற்று சீரமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் மாநகராட்சிகளின் ஆணையாளர்களிடமும், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரிடம் கேட்டறிந்தார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளின் தற்போதைய நிலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

நகர்ப்புற பகுதிகளில் டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விவரங்களையும் கேட்டறிந்தார். நகர்ப்புற பகுதிகளில், அனைத்து பகுதிகளுக்கும் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புராட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி–110ன் கீழ் வெளியிட்டப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மானியக் கோரிக்கை அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து அறிவிப்புகள் மீது தனிகவனம் செலுத்தி, விரைந்து செயல்படுத்தி, அனைத்துப் பணிகளையும் டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் முதன்மை செயலர் திரு.விக்ரம் கபூர், இஆப., தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி காக்கர்லால் உஷா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.சுவர்னா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.மகரபூஷனம் இஆப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு.கந்தசாமி இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர்கள், அனைத்து மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர்கள், மாநகராட்சி பொறியாளர்கள், மண்டல செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9